NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 24 September 2021

செய்திக்கொத்து

# உலகமயம் நல்லது: 83 விழுக்காட்டினர் கருத்து

பொருளியலுக்கு உலகமயமாக்கம் நல்லது என்று 83% சிங்கப்பூரர்கள் நம்புகிறார்கள். கொள்கை ஆய்வுக் கழகம் நடத்திய ஆய்வு மூலம் இது தெரியவந்துள்ளது.

அதேவேளையில், வெளிநாட்டில் இருந்து வருவோர் தங்கள் வேலைகளை எடுத்துக்கொள்ளக்கூடும் என்று தாங்கள் நம்புவதாக ஆய்வில் கலந்துகொண்டவர்களில் பாதிக்கும் அதிகமானவர்கள் தெரிவித்து உள்ளனர்.

அந்த ஆய்வு 2,001 சிங்கப்பூரர்களையும் நிரந்தரவாசிகளையும் உள்ளடக்கி சென்ற ஆண்டு செப்டம்பர் மாதத்திற்கும் நவம்பர் மாதத்திற்கும் இடையில் நடத்தப்பட்டது.

'சிங்கப்பூரில் தேசிய தனித்தன்மை: சிங்கப்பூரர்களின் தேசிய பெருமையையும் அடையாளத்தையும் புரிந்துகொள்வது' என்ற தலைப்பிலான அந்த ஆய்வு முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டன.

உலகமயமாக்கம், குடிநுழைவு பற்றிய தகவல்கள் பலரிடம் இருந்தும் திரட்டப்பட்டன. பொதுவாக உலகமயமாக்கம் சிங்கப்பூரர்களுக்கும் பொருளியலுக்கும் நன்மை பயக்கிறது என்று 83 விழுக்காட்டினர் நம்பிக்கை தெரிவித்தனர். இருந்தாலும் உலகமயமாக்கம் காரணமாக வெளிநாட்டினரும் பணக்காரர்களும் நன்மை அடைகிறார்கள் என்று 17 விழுக்காட்டினர் கூறினர்.

குடிநுழைவைப் பொறுத்தவரை, வெளிநாட்டினர் பொருளியலுக்கு ஊக்கம் அளிப்பதாக 75 விழுக்காட்டினர் ஒப்புக்கொண்டனர்.

புதிதாக இங்கு வருவோர் புதிய யோசனைகளையும் கலாசாரத்தையும் கொண்டு வருவதாக 62% கூறினர். வெளிநாட்டினர் சிங்கப்பூரர்களிடம் இருந்து வேலைகளை பறித்துக்கொள்வதாக 50% தெரிவித்தனர்.

வெளிநாட்டினருக்கு உதவ அளவுக்கு அதிகமாக அரசாங்கம் செலவிடுகிறது என்று நம்புவதாக 53% கூறினர். சமூக பொருளியலைப் பொறுத்தவரை, கீழ்மட்டத்தில் உள்ள, அவ்வளவாக படித்திராதவர்களிடையே இத்தகைய உணர்வு அதிகமாக இருக்கக்கூடும் என்பது ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.